**ஜூன் – 05**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு மாநில அரசாங்கமானது, முன்னாள் முதல்வர் M. கருணாநிதியின் பிறந்த நாளான ஜூன் 03 ஆம் தேதியன்று, "செம்மொழி தின விழாவை" கொண்டாடியது.
- பூந்தமல்லி-சுங்குவார்சத்திரம்-பரந்தூர் வழித்தட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தினை உருவாக்க தமிழ்நாடு அரசு கொள்கை ரீதியான ஒரு ஒப்புதலை அளித்துள்ளது.
- 1972 ஆம் ஆண்டில் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகளின்படி, மகாராஷ்டிர மாநிலத்தின் தடோபா-அந்தாரி புலிகள் வளங்காப்பகத்துடன் தெலங்கானா மாநிலத்திலுள்ள கவால் புலிகள் வழித் தடத்தினை இணைக்கச் செய்யும் புலிகள் வழித்தடப் பகுதியை தெலுங்கானா மாநில அரசு அறிவித்து ள்ளது.
- ஸ்பைடர் வெப் நடவடிக்கையின் (Operation Spider Web) கீழ், உக்ரேனிய நாட்டு ஆளில்லா வகை விமானங்களின் திரளானது ரஷ்யாவின் எல்லைகளுக்குள் ஊடுருவி அந்நாட்டு ராணுவ விமான தளங்களைத் தாக்கியது.
- சமீபத்தில் விருது வென்ற புகழ்மிக்க வனவிலங்குப் புகைப்படக் கலைஞரும் மூத்தப் பத்திரிகையாளருமான சன்ஜோய் மோங்கா காலமானார்.
  - 2005 ஆம் ஆண்டில், மோங்கா 'Wings – Birds of India' என்று அழைக்கப்படும் வருடாந்திரப் பாரம்பரிய நிகழ்ச்சியாக மாறியுள்ள மும்பையின் முதல் பறவைப் பந்தயத்தினை அறிமுகப்படுத்தினார்.
- உலக மிதிவண்டி தினம் ஆனது, மேம்பாடு, நிலைத்தன்மை மற்றும் உடல்நல ஆரோக்கியத்தில் மிதிவண்டியின் பங்கினை முன்னிலைப்படுத்துவதற்காக ஜூன் 03 ஆம் தேதியன்று ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.
- விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், ஆக்கிரமிப்பு காரணமாக உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் எதிர்கொண்ட வேதனையினை மிக நன்கு அங்கீகரிப்பதற்காகவும் வேண்டி ஆண்டுதோறும் ஜூன் 04 ஆம் தேதியன்று "ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகளுக்கான சர்வதேச தினம்" ஆனது அனுசரிக்கப் படுகிறது.
- குஜராத்தின் அஹமதாபாத்தில் நடந்த 2025 ஆண்டின் இறுதிப் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி தனது முதல் ஐபிஎல் கோப்பையை வென்றது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டில் மொத்த சிறு கடன்கள்

- தமிழ்நாட்டில் உள்ள சிறுகடன் வழங்கீட்டுத் துறையின் மொத்த நிலுவைக் கடன் (GLP) 2025 ஆம் நிதியாண்டில் குறைந்துள்ளது.
- தமிழ்நாட்டில் 2024 ஆம் நிதியாண்டில், 58,200 கோடி ரூபாயாக இருந்த GLP ஆனது 2025

ஆம் நிதியாண்டில் 19.6% குறைந்து, 46,800 கோடி ரூபாயாக இருந்தது.


- காலாண்டு கால அடிப்படையில், GLP ஆனது 50,700 கோடி ரூபாயிலிருந்து 7.7% சரிந்தது.
- தமிழ்நாடு (-7.7%, காலாண்டின் அடிப்படையில்) மாநிலத்தினைத் தொடர்ந்து கர்நாடக மாநிலத்தில் (-7.0% காலாண்டின் அடிப்படையில்) அதிகளவிலான GLP சரிவு பதிவாகி உள்ளது.




| | GLP (₹K Cr) Mar'24 | GLP (₹K Cr) Dec'24 | GLP (₹K Cr) Mar'25 | Q-o-Q Growth % |
|---|---|---|---|---|
| Tamil Nadu | 58.2 | 50.7 | 46.8 | -7.7% |
| Karnataka | 42.6 | 38.0 | 35.4 | -7.0% |

# தேசியச் செய்திகள்

## 34 உயிரி ஊக்கிகள் குறித்த அறிவிப்பு





- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சமானது கடற்பாசி சாறுகள், ஹ்யூமிக் மற்றும் ஃபுல்விக் அமிலங்கள் போன்ற 34 உயிரி ஊக்கிகளை அறிவித்து உள்ளது.
- அவை 1985 ஆம் ஆண்டு உரக் கட்டுப்பாட்டு ஆணையின் (FCO) கீழ் அறிவிக்கப்பட்டு உள்ளன.
- உயிரி ஊக்கிகள் ஆனது, அவற்றை தனித்துவமான உரங்களின் வகுப்பு என வகைப் படுத்தி, FCO ஆணையில் 2021 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டன.

- உயிரி ஊக்கிகள் அல்லது தாவர வளர்ச்சி ஊக்கிகள் ஆனது ஊட்டச்சத்து உறிஞ்சுதல் மற்றும் நெருக்கடி எதிர்ப்புத் திறனை நன்கு மேம்படுத்துவதன் மூலம் தாவரங்கள் வளர உதவுகின்ற இயற்கையான அல்லது உயிரியல் தயாரிப்புகள் ஆகும்.
- இவற்றில் 1968 ஆம் ஆண்டு பூச்சிக் கொல்லிகள் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பூச்சிக்கொல்லிகள் அல்லது தாவர வளர்ச்சிக் கட்டுப்பாட்டுக் காரணிகள் எதுவும் உள்ளடங்காது.

# சர்வதேசச் செய்திகள்

## ஜங்கேசூர் வழித்தடம்

- ஜங்கேசூர் வழித் தடம் ஆனது, அஜர்பைஜான் கட்டியெழுப்ப முனைந்து வரும் முன் மொழியப்பட்ட ஒரு போக்குவரத்து வழித்தடமாகும்.
- அஜர்பைஜானின் பிரதான நிலப் பகுதியை நாக்சிவன் தன்னாட்சி குடியரசு எனப்படும் சிறிய, பிரிக்கப்பட்ட பகுதியுடன் இணைப்பதே இதன் குறிக்கோள் ஆகும்.
- அஜர்பைஜானின் ஒரு பகுதியாக உள்ள இந்த இடமானது, நாட்டின் பிற பகுதிகளுடன் நேரடியாக இணைக்கப்படவில்லை.
- இந்த வழித்தடம் நிறைவடைந்தால், அது அஜர்பைஜான் மற்றும் துருக்கி ஆகியவை ஒன்றுக்கொன்று நேரடி நில அணுகலை மேற்கொள்ள வாய்ப்பளிக்கும்.
- 2020 ஆம் ஆண்டில், அஜர்பைஜானும் அர்மேனியாவும் இந்த நகோர்னோ-காராபாக் பிராந்தியத்தில் ஒரு போரில் ஈடுபட்டன.





# பொருளாதாரச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் UPI பரிவர்த்தனைகள்

- மே மாதத்தில் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தில் (UPI) மேற்கொள்ளப் பட்ட பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை ஆனது 18.68 பில்லியன் அளவையும், 25.14 டிரில்லியன் ரூபாய் மதிப்பையும் எட்டின.
- இந்தப் பரிவர்த்தனையில் பதிவான முந்தைய சாதனை அளவு, 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், எண்ணிம பண வழங்கீட்டு அமைப்பானது 18.3 பில்லியன் அளவையும், 24.77 டிரில்லியன் ரூபாய் மதிப்பையும் எட்டியபோது பதிவானது.
- UPI செயலிகள் ஆனது ஏற்கனவே பூடான், பிரான்சு, மொரீஷியஸ், நேபாளம், சிங்கப்பூர், இலங்கை மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் QR குறியீடுகள் வழியாக

ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.


- ❖ இந்திய நாட்டுப் பயணிகள் UPI தளங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டில் வணிகக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள இது வழிவகுக்கிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நுவாக்சோவிட் கோவிட் தடுப்பூசி

- ❖ நோவாவாவாக்ஸ் (நுவாக்சோவிட்) என்ற மருந்து அதன் புரத அடிப்படையிலான கோவிட்-19 தடுப்பூசிக்கான அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பின் (FDA) முழுமையான ஒப்புதலைப் பெற்றுள்ளது.
- ❖ நுவாக்சோவிட் (NVX-CoV 2705) என்பது JN.1 என்ற மாற்றுவினைத் தாக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ள நோவாவாவாக்ஸின் முன்மாதிரி கோவிட்-19 தடுப்பூசியின் (NVX-CoV 2373) புதுப்பிக்கப்பட்ட வடிவமாகும்.
- ❖ இந்தப் புரத அடிப்படையிலான தடுப்பூசி (mRNA அடிப்படையிலானது அல்ல) ஆனது COVID-19 தொற்றினை ஏற்படுத்துகின்ற SARS-COV-2 வைரசின் மேற்பரப்பு கதிர் வடிவ புரதத்தின் நகல்களை உருவாக்குவதன் மூலம் தயாரிக்கப்படுகிறது.
- ❖ நோய்த் தொற்று அல்லாத கதிர் வடிவ புரதம் ஆனது ஒரு ஆன்டிஜெனாக செயல்பட்டு, வைரஸை கண்டறிய நோயெதிர்ப்பு மண்டலத்தைத் தூண்டுகிறது.




## சீரொளிக் கற்றை ஆயுதப் பயன்பாடு

- ❖ காசாவில் நடைபெற்று வரும் போரின் போது எதிரி நாட்டின் ஆளில்லா வகையான விமானங்களை வீழ்த்த சீரொளிக் கற்றை (லேசர்) ஆயுதங்களைப் பயன்படுத்திய


உலகின் முதல் நாடாக இஸ்ரேல் மாறியுள்ளது.

- Iron Beam என வெகுவாக அழைக்கப்படும் இது மேகன் எனப்படும் அதன் எபிரேய மொழிப் பெயராலும் அறியப்படுகிறது.
- இது அந்நாட்டிடம் ஏற்கனவே உள்ள இரும்புக் கவசம், டேவிட் ஸ்லிங் மற்றும் ஆரோ போன்ற அமைப்புகளுடன் துணையாக அமையும்.
- இந்த சீரொளிக் கற்றை ஆயுத அமைப்புகள் ஆனது, ஆளில்லா விமானங்கள் போன்ற எதிரி நாட்டின் மலிவான இலக்குகளை அழிப்பதற்காக என விலையுயர்ந்த எறிகணை இடைமறிப்பு அமைப்புகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.
- ஆனால் இவற்றின் அதிகபட்சத் தாக்குதல் வரம்பு சுமார் 10 கிலோ மீட்டராக உள்ளதால் இது Iron Dome அமைப்பின் 40 கிலோமீட்டர் தாக்குதல் வரம்பை விட குறைவானதாகும்.
- ரஷ்யா (Peresvet), அமெரிக்கா (HELIOS), சீனா (Hurricane-3000), ஐக்கியப் பேரரசு (DragonFire) மற்றும் இந்தியா (IDD&IS) Mk2A ஆகியவை இதே போன்று இயங்கும் உலகின் மற்ற சில அமைப்புகளாகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பிர்ச் பனிப்பாறையின் சரிவு





- ஒரு பனிப்பாறையின் பெரும் பகுதியானது பெரும் பள்ளத்தாக்கில் சரிந்ததை அடுத்து

சுவிட்சர்லாந்தின் ஒரு கிராமமான பிளாட்டன் பகுதியளவு அழிக்கப்பட்டுள்ளது.

- இது வடக்கு சுவிட்சர்லாந்தில் உள்ள லட்செண்டல் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.
- இந்தப் பனிப்பாறை சரிவு ஆனது அந்தப் பள்ளத்தாக்கு வழியாக ஓடுகின்ற லோன்ஸா ஆற்றின் ஓட்டத்தைத் தடுத்தது.
- 2023 ஆம் ஆண்டில், சுவிட்சர்லாந்து நாட்டின் மொத்தப் பனிப்பாறை அளவில் சுமார் 4% மறைந்து விட்டது.
- இது 2022 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 6% அளவு வீழ்ச்சிக்குப் பிறகு ஓராண்டு இடைவெளியில் பதிவான இரண்டாவது மிகப்பெரிய வீழ்ச்சியாகும்.

### இந்தியாவில் ஆர்க்டிக் சபின் நீள் சிறகு கடற்பறவை




- மிகவும் அரிய ஆர்க்டிக் சபின் நீள் சிறகு கடற்பறவையானது குஜராத் மாநிலத்தின் நல்சரோவர் வனவிலங்கு சரணாலயத்தில் தென்பட்டது.
- இது இந்தியாவில் முதல் முறையாக 2013 ஆம் ஆண்டில் கேரளாவில் தென்பட்டது.
- இந்த இனங்கள் முதன்மையாக வட அமெரிக்கா, கிரீன்லாந்து மற்றும் சைபீரியாவின் உயர் மட்ட அட்சரேகைப் பகுதிகளின் ஆர்க்டிக் பகுதிகளில் இனப்பெருக்கம் செய்து, ஈரப்பதம் மிக்க துந்த்ரா பகுதிகளுக்கு அருகில் கூடு கட்டுகின்றன.
- குளிர்காலத்தில் இவை பொதுவில் தென் அமெரிக்கா மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவின் கடற்கரைகளின் அதிக வளம் மிக்க கடல் பகுதிகளுக்கு வலசை போகின்றன.
- இவை பொதுவாக அவற்றின் வலசையின் போது இந்தியா வழியாக செல்லாது.

## மாநிலச் செய்திகள்

### பார்வடிஹ் காட்டில் புலிகளை காண்பதற்கான சுற்றுப்பயணம்

- லாட்ஹார் மாவட்டத்தில் உள்ள பார்வடிஹ் மேற்கு வனப்பகுதிகளின் விளிம்போரப் பகுதியில் தனது மாநிலத்தின் புலிகளை காண்பதற்கான முதலாவது சுற்றுப்பயண அம்சங்களை நிறுவுவதற்கு ஜார்க்கண்ட் மாநில அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
- இந்தப் பகுதியானது பலமு புலிகள் வளங்காப்பகத்தின் (PTR) கீழ் வருகிறது.
- புலிகளைக் காண்பதற்கான சுற்றுப்பயணம் ஆனது, 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு

(பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் வரையறுக்கப்படவில்லை.

- 2012 ஆம் ஆண்டில் தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் (NCDA) வழங்கிய சுற்றுலாவிற்கான வழிகாட்டுதல்களில் இந்தக் கருத்தாக்கமானது முதன்முதலில் முன் வைக்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டில், புலிகள் வளங்காப்புகளின் இடையக மற்றும் விளிம்போரப் பகுதிகளில் புலிகளை காண்பதற்கானச் சுற்றுப்பயணங்களை நிறுவுவதற்கான சில வழி காட்டுதல்களை NCDA வெளியிட்டது.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், புலிகளைக் காண்பதற்கான சுற்றுப்பயண அம்சங்கள் ஆனது புலிகள் வளங்காப்பகங்களின் மையம் மற்றும் அதன் இடையகப் பகுதிகளுக்கு வெளிப்புறத்தில் மட்டுமே நிறுவப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.



**Jharkhand government plans to establish the state's first tiger safari in the fringe area of the Barwadih Western Forest Range**

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## நார்வே செஸ் போட்டி 2025 – D.குகேஷ்





- உலகச் சாம்பியன்சிப் பட்டம் பெற்ற D குகேஷ், 2025 ஆம் ஆண்டு நார்வே சதுரங்கப் போட்டியில் உலகின் முன்னணி சதுரங்க வீரர் மேக்னஸ் கார்ல்சனை தோற்கடித்தார்.
- இந்த வெற்றியானது நார்வே நாட்டு கிராண்ட்மாஸ்டருக்கு எதிராக கிளாசிக் பிரிவில்

குகேஷின் முதல் வெற்றியாகும்.

- 19 வயதான குகேஷ், இரமேஷ்பாபு பிரக்ஞானந்தாவுக்குப் பிறகு இந்தப் போட்டியின் வரலாற்றில் கார்ல்சனை வீழ்த்திய இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

### தேசிய அனுபவ் விருதுகள் 2025

- இதில் 5 ஓய்வு பெற்ற பணியாளர்கள் அனுபவ் விருதிற்கும் மற்றும் 10 ஓய்வு பெற்ற பணியாளர்கள் சாதனை சான்றிதழ்களுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
- இந்த ஆண்டின் தேசிய அனுபவ் விருதுகள் திட்டத்தின் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க விரிவாக்கத்தை இது குறிக்கிறது.
- மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் (CPSE) மற்றும் பொதுத்துறை வங்கிகள் (PSB) ஆகியவற்றின் ஊழியர்கள் முதல் முறையாக மத்திய அரசு ஊழியர்களுடன் இதில் கலந்து கொள்வதற்கு தகுதி பெறும் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.
- ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நலத் துறையானது 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 'அனுபவ்' என்ற ஓர் இயங்கலை தளத்தை அறிமுகப்படுத்தியது.
- இது அரசாங்கத்தில் பணிபுரியும் போது ஓய்வு பெறும் அல்லது ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கிறது.
- இந்த வருடாந்திர விருதுகள் திட்டமானது, ஓய்வு பெறும் / ஓய்வு பெற்ற ஊழியர்கள், தங்கள் அனுபவங்களை எழுதுவதன் மூலம் தங்கள் அனுபவத்தினைச் சமர்ப்பிக்க ஊக்குவிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது வரையில் 59 அனுபவ் விருதுகள் மற்றும் 19 சாதனை சான்றிதழ்கள் வழங்கப் பட்டு உள்ளன.




## இதரச் செய்திகள்

### அதிக ஆயுட்காலம் பதிவாகியுள்ள நாடுகள்

- உலகின் சராசரி ஆயுட்காலம் ஆனது, 2024 ஆம் ஆண்டில் 73 ஆண்டுகள் என மதிப்பிடப்

பட்டுள்ளது.

- ஆயுட்கால பதிவில் முன்னணியில் உள்ள 25 நாடுகளில் பெரும்பாலானவை அதாவது மொத்தம் 16 நாடுகள் ஐரோப்பாவில் உள்ளன.
- மொனாக்கோ எனும் சிறிய, பணக்கார நாடு ஆனது, மிக சராசரியாக 86.5 ஆண்டுகள் வசிக்கும் குடியிருப்பாளர்களுடனும், சுமார் 88 ஆண்டுகளுக்கும் மேலாக உயிர் வாழும் பெண்களுடன் முன்னணியில் உள்ளது.
- இதற்கு அடுத்தபடியாக சான் மரினோ (சுமார் 85.8 ஆண்டுகள்) மற்றும் ஹாங்காங் (85.6 ஆண்டுகள்) ஆகியவை உள்ளன என்பதோடு இவை இரண்டும் வாழ்க்கை மற்றும் சுகாதார அமைப்புகளின் உயர் தரத்தை வழங்குகின்றன.
- ஜப்பான் (4), தென் கொரியா (5), சிங்கப்பூர் (10), மற்றும் ஹாங்காங் (3) உள்ளிட்ட கிழக்கு ஆசிய நாடுகள் முதல் 10 இடங்களில் முன்னணியில் உள்ளன.
- பிரான்சு (5.6 ஆண்டுகள்) மற்றும் ஜப்பான் (6.1 ஆண்டுகள்) போன்ற நாடுகளில் பாலின ஆயுட்கால இடைவெளி பெரிய அளவில் உள்ளது.
- ஐரோப்பா மற்றும் ஆசியாவைச் சாராத நாடுகளில் ஆஸ்திரேலியா (8) மட்டுமே இரு பாலினத்திலும் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டில், இந்தியாவின் ஆயுட்காலம் சுமார் 72.48 ஆண்டுகளாக அதிகரித்து உள்ளது.
- இந்தியாவில் பெண்கள் சராசரியாக சுமார் 74.13 ஆண்டுகள் உயிர் வாழ்வதுடன் நீண்ட காலம் வாழ்கின்றனர் என்ற நிலையில் ஆண்கள் 70.95 ஆண்டுகள் வாழ்கின்றனர்.

| Rank | Country | Life Expectancy (Male) | Life Expectancy (Female) | Life Expectancy (Both Sexes) |
|---|---|---|---|---|
| 1 | Monaco MC | 84.6 | 88.6 | 86.5 |
| 2 | San Marino SM | 84.3 | 87.2 | 85.8 |
| 3 | Hong Kong HK | 83.0 | 88.3 | 85.6 |
| 4 | Japan JP | 81.8 | 87.9 | 84.8 |
| 5 | South Korea KR | 81.3 | 87.3 | 84.4 |
| 6 | Andorra AD | 82.3 | 86.2 | 84.2 |
| 7 | Switzerland CH | 82.2 | 86.0 | 84.1 |
| 8 | Australia AU | 82.3 | 85.5 | 84.1 |
| 9 | Italy IT | 81.8 | 85.9 | 83.9 |
| 10 | Singapore SG | 81.4 | 86.4 | 83.9 |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★